செ.வெ. எண்: 366 நாள்: 18. 06. 2011

**அரசு புகைப்படக் கலைஞர்களுக்கு பயிற்சி**
**மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு G. செந்தமிழன் அவர்கள் துவக்கி வைத்தார்**

*****

தமிழக அரசின் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில், அரசின் புகைப்படக் கலைஞர்களுக்கான பயிற்சிக் கூட்டம் சென்னை துரைப்பாக்கத்தில் இன்று காலை (18.6.2011) நடைபெற்றது. இப்பயிற்சிப் பட்டறையை மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.G.செந்தமிழன் அவர்கள் துவக்கி வைத்தார்கள். செய்தித்துறை இயக்குநர் முனைவர் மூ.ராசாராம்,இ.ஆ.ப., அவர்கள் தலைமை தாங்கினார்கள். மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு G. செந்தமிழன் அவர்கள் துவக்கிவைத்து பேசும்போது கூறியதாவது:-

மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஒரு நாளைக்கு 24 மணி நேரம் நாட்டுக்காக உழைக்கின்றார்கள். அந்த வகையில் நீங்களும் பணியில் ஆர்வத்துடன் சிறப்புடன் பணியாற்றுவதோடு, நீங்கள் எடுக்கும் புகைப்படங்கள் மற்றவர்கள் போற்றும் வகையில் பார்த்தவுடன் ஈர்க்கும் வண்ணம் இருக்க வேண்டும். ஒருவரையொருவர் மிஞ்சும் வகையில் உங்கள் புகைப்படங்கள் தெளிவுடனும், துல்லியமாகவும் இருக்க வேண்டும். போட்டி மனப்பான்மை உங்களிடம் இருக்க வேண்டும். அப்போதுதான் புகைப்படக் கலை வளரும். அரசின் திட்டங்கள், செயல்பாடுகள், நலத்திட்ட உதவிகளும் மக்கள் மனதில் பதியும் வண்ணம் இருக்கும். எனவே, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நலத்திட்டங்கள் நல்லமுறையில் மக்களைச் சென்றடையும் வகையில் சிறப்பாக செயல்படுமாறு கேட்டுக் கொள்கிறேன். இந்த பயிற்சி உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும். உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள புகைப்படக் கருவிகள் நீண்ட காலத்திற்கு முன்பு வாங்கப்பட்டதால் புதிய நவீன புகைப்படக் கருவிகள் வேண்டும் என்று கேட்டுள்ளீர்கள். உங்கள் கோரிக்கையை மாண்புமிகு இதயதெய்வம் தமிழக முதல்வர் அம்மா அவர்களிடம் எடுத்துச் சொல்லி உரிய நடவடிக்கையை மேற்கொள்வேன் என அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்” என்று கூறினார்.

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்பு மற்றும் அலுவலால் அரசு சிறப்புச் செயலாளர் முனைவர் மூ.ராசாராம்,இ.ஆ.ப., அவர்கள் பேசும்போது:-

“பயிற்சி என்பது எல்லா அலுவலர்களுக்கும் அவசியமாகும். பயிற்சி கொடுக்கப்படும் போது அவர்களின் செயல்திறன் அதிகரிக்கிறது. மேலை நாடுகளிலும் இப்படிப்பட்ட பயிற்சியைக் கொடுத்து வருகின்றனர். இதன் மூலம், பண்புடன் பழகும் முறை, பேசும் முறை, சிறப்பு பெறுகிறது. நமது புகைப்படக் கலைஞர்கள் சிறப்புடன் கால நேரம் பாராமல் பணியாற்றி வருபவர்கள். இவர்களது திறமை மேன்மேலும் மிளிரும் பொருட்டு கொடுக்கப்படுகின்ற இந்த பயிற்சி அவர்களுக்கு பயனுள்ளதாக அமையும்” என்று தெரிவித்தார். உங்களது சிறப்பான செயல்பாடுகளால் நீங்கள் எடுக்கும் புகைப்படங்கள் தமிழரசு இதழில் இடம்பெற வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த திட்டங்கள், வெற்றி கதைகள் ஊடகங்களில் இடம் பெறும் வகையில் புகைப்படங்கள் அமையவேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கலந்து கொண்ட பல்வேறு நிகழ்ச்சிகளின் புகைப்படங்களை, கண்காட்சியில் வைப்பதற்கு ஏதுவாக உடனடியாக தலைமையித்திற்கு அனுப்பிவைக்க கேட்டுக் கொண்டார். முன்னதாக துணை இயக்குநர் (செய்தி) திரு.எஸ்.பி.எழிலழகன் அனைவரையும் வரவேற்று உரையாற்றினார். இப்பயிற்சி முகாமில் செய்தி மக்கள் தொடர்புத்துறையினைச் சார்ந்த தலைமையிடம் மற்றும் மாவட்டங்களில் பணியாற்றும் புகைப்படக்காரர்கள் கலந்து கொண்டனர்.

பிரபா இண்டஸ்ட்ரீஸ் நிறுவனர் திரு.சிவக்குமார் இப்பயிற்சிக்கு ஏற்பாடு செய்ததோடு கலந்து கொண்ட புகைப்படக் கலைஞர்களுக்கு புகைப்படக்கருவி பேக் கிட் வழங்கினார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை.**